

வேலூர் அண்ணா கலையரங்கம் அருகில் தெற்கு வடக்கு மாவட்டம் சார்பில் ஒன்றிய அரசின் கைப்பாவையாக மாறிய தேர்தல் ஆணையத்தின் எஸ்.ஐ.ஆர்.ரைக் கண்டித்து நடந்த ஆர்ப்பாட்டத்தில் மார்க்சிஸ்ட் கட்சி முன்னாள் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. கலந்துகொண்டு பேசினார்கள். உடன் மாவட்ட அவைத்தலைவர்தி.அ.முகமதுசகி மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார் மற்றும் கூட்டணி கட்சியினர், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு – காஞ்சிபுரம், வடக்கு – திருவள்ளூர் கிழக்கு, மேற்கு, மத்திய மாவட்டங்களுக்குட்பட்ட**

# மாவட்டச் செயலாளர்கள் - சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் - தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள்- மாவட்ட சட்டத்துறை ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) கூட்டம்!

## துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. அறிவிப்பு!



சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு - காஞ்சிபுரம் வடக்கு - திருவள்ளூர் கிழக்கு, மேற்கு, மத்திய மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்ட கழகச் செயலாளர்கள் - சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் - தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் (OTN) - மாவட்ட சட்டத்துறை ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) கலந்துரையாடல் கூட்டம் இன்று (13.11.2025-வியாழக்கிழமை) காலை 11.30 மணியளவில் சென்னை, தியாகராயர் நகர், ஒட்டல் அகார்டில் நடைபெறும். இக்கூட்டத்தில் சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. கலந்து கொள்ள உள்ளார்.

அதுபோது மேற்குறிப்பிட்ட அனைவரும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொருள் : கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் 09.11.2025 அன்று நடைபெற்ற காணொலிக் காட்சி கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி கணக்கீட்டு படிவம் (Enumeration Form) மீதான பணிகளை முழுமையாக முடிப்பது குறித்து!

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
09.11.2025

**ஆ.இராசா எம்.பி.**
துணைப் பொதுச் செயலாளர்
தி.மு.க.



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட, கண்டோன்மெண்ட் நகரத்தில் உள்ள 52 பாகங்கள் மற்றும் ஆலந்தூர் மண்டலத்தில் அடங்கிய 160, 161வது வார்டில் உள்ள 38 பாகங்களில் பாகம் வாரியாக நியமிக்கப்பட்டுள்ள பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக நிலை முகவர் (BLA2), பாக டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) ஆகியோரை மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் நேரில் சந்தித்து S.I.R பணிகள் குறித்து கலந்துரையாடினார். உடன் மண்டல குழு தலைவர் என்.சந்திரன், பகுதிச் செயலாளர் பி.குணாளன், கண்டோன்மெண்ட் நகரச் செயலாளர் டி.பாபு, வட்டச் செயலாளர்கள் கே.பி.முரளிகிருஷ்ணன், எம்.ஆர்.சீனிவாசன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

**மண்டலப் பொறுப்பாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் பங்கேற்பு!**

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசரச் செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!

செஞ்சி, நவ 13 -

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப.சேகர் தலைமையில் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர்கள் செஞ்சி கார்த்திகேயன், மயிலம் இள.புகழேந்தி, திண்டிவனம் ஜாஃபர் அலி ஆகியோர் முன்னிலையில் இன்று (13.11..2025 - வியாழக்கிழமை) மாலை 4.00 மணி அளவில் செஞ்சி சேத்பட் சாலையில் உள்ள மேல்களவாய் ஜி.கே.திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்



எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதி, நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. SIR (சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் சீராய்வு) சம்பந்தமாக.

2. துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது சம்பந்தமாக.

3.கழக ஆக்கப்பணிகள் சம்மந்தமாக ஆலோசிக்கப்படுகிறது என்று மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள குரோம்பேட்டை அரசினர் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மாவட்ட அளவில் நடைபெற்ற ஆக்கி போட்டியில் வெற்றி பெற்று மாநில அளவில் நடைபெறும் போட்டியில் பங்கேற்க உள்ளதை ஒட்டி பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதியை சந்தித்து வாழ்த்துக்கள் பெற்றனர். துணை தலைமை ஆசிரியர் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

**துறைமுகம் மேற்கு – 57 வது வட்டப் பகுதிப் பிரதிநிதி**

# வி.ஸ்டாலின் இல்லத் திருமண வரவேற்பு விழா: அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்துகிறார்!

## தயாநிதி மாறன் எம்.பி – மேயர் பிரியா ராஜன் – எஸ்.முரளி பங்கேற்பு!

சென்னை, நவ. 13 -

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்குப் பகுதி, 57 வது வட்டம், பகுதிப் பிரதிநிதி வி.ஸ்டாலின் - எஸ். தேன்மொழி ஆகியோர் புதல்வி எஸ்.ஸ்நேகாவிற்கும், சென்னை, எஸ். முரளி - எம்.ஜானகி ஆகியோர் புதல்வர் எம். கிஷோருக்கும் திருமண வரவேற்பு விழா இன்று (13.11.2025 - வியாழக்கிழமை) மாலை 6 மணிக்கு மேல், சென்னை, மூர்மார்க்கெட், சைடம் ரோடு, கண்ணப்பர் திடல் சமூதாய நலக் கூடத்தில் நடைபெறுகிறது.

இத்திருமண வரவேற்பு விழாவிற்கு சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை ஏற்று மணமக்களை வாழ்த்துகிறார்.

பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர் மற்றும் இரா.நரேந்திரன், வி.சுதாகர், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன்,



இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமலு, கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துகுமார், ஆர். ராஜேஷ் ஜெயின், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, கே.ஆர்.மதன், பா.ஜெகதீஷ், ஏ.பி.எஸ். செந்தில் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆர்.மாரி, எம்.இருதயராஜ், என்.கோபிகிருஷ்ணன், டி.வினோத் கோத்தாரி, எஸ்.வடிவேல், கே.தனபாக்கியம், பி.கர்ணா, ஆர்.ராம் பிரசாத், டி.கே.கலைவாணன், ஜி.நேரு, எம்.முத்து, கே. கஸ்தூரி, ஜெ.டி.எம். ஹரிஷ்குமார், இ.மாயா, டி.கே.சங்கர், எஸ்.பச்சைமுத்து, எம்.சரவணன், டி. அலெக்ஸ் பாண்டியன், எம்.ராணி, எம்.செல்வி, எம்.முத்தமிழ்செல்வி, கே.பத்மா, கே.ஆர்.மணிரத்தினம், எம்.தர்மா, ஆர். வெங்கடேசன், ஏ.பசுபதி, ஏ.ராமச்சந்திரன், எம். தினேஷ், எஸ்.தினேஷ், எம்.ஜி.வினோத்குமார், எஸ்.எஸ்.எஸ்.சரவணன், பி.குட்டி (எ) சரவணன், இ.சுரேஷ், எஸ்.முகேஷ், ஆர்.ராஜேஷ், ஆர். கே.பாலாஜி, பி.கே.சரவணன், எம்.ரகு, ஏ.அஜித்குமார், பி.பாலு வினோத், ஏ.ஆகாஷ், எஸ்.விஜயசேகர், பி.தமிழ்வாணன், கே. அஜித், எம்.சரத், எஸ். தனுஷ் பாபு ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இத்திருமண வரவேற்பு விழாவில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இதில் என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, எம்.இ.கனி, ஆர்.கலைச்செல்வி, வெ. பரிமளம், எல்.நவின், மே.ஜனார்த்தனன், ஆர். சுந்தரம், எஸ்.சந்தியாகு, பா.முத்துக்குமார், செ.தமிழ்வாணன், வி.சந்தான லட்சுமி, சி.ப.ஜெயராமன், பி.விஜயகுமார், எம்.விநாயகம், எல்.சம்பத்குமார், எல்.சாந்திலால்,

எம்.ஜெய்சங்கர் ஆர். ரவிச்சந்திரன், பா. கதிரவன், டி.சதீஷ்குமார், வே.பா.பிரபாகரன், எல். சத்திய நாராயணன், எஸ். புகழேந்தி, ஆர்.ஏ. அஸ்லாம், டி.கதிரவன், எம். பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

137 வது பாக முகவர் எஸ்.தனுஷ் நன்றி கூறுகிறார்.

# எழும்பூர் தொகுதி: வார்டு எண்.108இல் நடைபெறும் பணிகள்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. ஆய்வு!

எழும்பூர், நவ. 13 -

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108-இல் நடைபெற்று வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஆய்வு செய்தார்.

சேத்துப்பட்டு, சுப்பராயன் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.2.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் தருவாயில் இருப்பதையும்;

சுப்பராயன் தெரு- வெங்கடாசலபதி தெரு சந்திப்பில் சிதிலமடைந்த நிலையில் இருந்த ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட மூடுண்ட மழைநீர் வடிகாலை (British Arch Canal) இடித்துவிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் புதிய மழைநீர் வடிகால் கட்டப்பட்டு வருவதையும்;

சேத்துப்பட்டு, மேயர் இராமநாதன் சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடல் மற்றும் உடற்பயிற்சிக் கூடத்தில் மேம்பாட்டு பணிகள் நடந்துவருவதையும் ஆய்வு செய்த சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், இப்பணிகளை விரைந்து முடிக்குமாறு துறை சார்ந்த அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வின்போது சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த சுகாதார அலுவலர்கள், மின்துறை அலுவலர்கள், 108-வது வட்ட உதவிப் பொறியாளர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

108-வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் வர்த்தகர் அணி அமைப்பாளர் இரா.வெற்றிவேல், எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் சி. முத்துலெட்சுமி, 108-வது வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.மணிகண்டன், 108 ‘அ’ வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பு. சதிஷ்குமார், 108-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ்குமார், 108 ‘அ’ வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சூர்யா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இவ்வாய்வில் கலந்து கொண்டனர்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.108, சேத்துப்பட்டு, சுப்பராயன் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.2.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் தருவாயில் இருப்பதை ஆய்வு செய்தார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே.கே. கோட்டையப்பன்

**நவம்பர் 13 (1996)**



**தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**சிவந்திப்பட்டி பஞ்சாயத்து தலைவராகவும் – மாவட்ட நிலவள வங்கி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் “இளைஞர் அணியின் செயல்திறன் மிக்க சிங்கக் குட்டியாகவும், அனைவரையும் அரவணைத்து கழகத்தின் ஆக்கப்பணிகளை அயர்வின்றி நிறைவேற்றுகிற அமைதியின் உறைவிடமாகவும் திகழ்ந்தவர்” என தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**